DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No.171/2012
Prosecution Witness PW 1
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. அங்குச்சாமி | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - 19.07.2023.

எதிரிஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது மதுரை மாநகரில் குடியிருக்கிறேன். நான் அரசுப் போக்குவத்துக் கழகத்தில் பயணசீட்டு ஆய்வளராக பணிபுரிந்து கடந்த 30.09.2010-ல்பணி ஓய்வு பெற்றுவிட்டேன். சம்பவநேரத்தில் நான் மதுரை புறவழிச்சாலை தலைமை அலுவலகத்தில் பயணச்சீட்டு ஆய்வாளராக வேலை பார்த்து வந்தேன். எனக்கு சம்பவத்தன்று செக்கானூரணியில் பணியில் இருந்தேன். 14.07.2010 அன்று காலை சுமார் 09.30 மணியளவில் நான் பணியில் இருந்தபோது செக்கானூரணி வடிவேல் தியேட்டர் அருகில் பேருந்தானது மதுரையில் இருந்து தேனி, கம்பம், சின்னமனூர் போன்ற ஊர்களுக்கு கிழக்கிலிருந்து மேற்குநோக்கி சென்றுகொண்டிருந்தது. சுமார் 14 பேருந்துகள் சென்றுகொண்டிருந்தது. அப்போது திடீரென ஒரு கும்பல் வந்து முருகன்ஜி வாழ்க என்று கோசம் போட்டு கற்களைக் கொண்டு பேருந்தின் முன்பக்க மற்றும் பின்பக்க கண்ணாடிகளை உடைத்து சென்றார்கள். அவர்கள் யார் என்ன விபரம் என காவல்துறையினரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டேன். மேற்படி கண்ணாடிகளை உடைத்த பேருந்தின் எண்கள் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி 14 பேருந்துகளின் சேதார மதிப்பானது சுமார் ரூபாய் ஒரு இலட்சத்து தொன்னூற்று ஆறாயிரம் ஆகும். இது சம்பந்தமாக நான் உடனடியாக காவல்நிலையம் சென்று புகார்மனு எழுதிக் கொடுத்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகார் நான் கைப்பட எழுதியது, அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக காவல்ஆய்வாளர் என்னை அன்றே விசாரித்தார்.

குறுக்குவிசாரணை- இல்லை.

ஒப்பம்- அங்குச்சாமி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No.171/2012
Prosecution Witness PW2
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பூமிராஜன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - 19.07.2023.

எதிரிஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது உசிலம்பட்டி கிளையில் உள்ள அரசுப்போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். 14.07.2010 அன்று மதுரை பெரியார்பேருந்து நிலையத்திலிருந்து உசிலம்பட்டிக்கு பேருந்து தட எண்.55U -TN58 N 1584 பேருந்தை ஓட்டிச் சென்றபோது, செக்கானூரணி வடிவேல் தியேட்டர் அருகில்சென்றபோது சுமார் 10 முதல் 15 வண்டிகள் வரிசையாக நின்று கொண்டிருந்தன. அப்போது கல்லைக் கொண்டுசிலர் தெருவிற்குள் இருந்து எறிந்துவிட்டபடியால், பேருந்தின் முன்பக்க கண்ணாடியானது உடைந்து விட்டது. கல்லைக் கொண்டு எறிந்தவர்கள் என்ன சொல்லிக் கொண்டு எறிந்தார்கள் என எனக்கு ஞாபகமில்லை. எனக்கு முன், பின் வந்த பேருந்துகளின் எண்கள் ஞாபகமில்லை. இது சம்பந்தமாக நான் பயணச்சீட்டு ஆய்வாளருடன்காவல்நிலையம் சென்று பயணச்சீட்டு ஆய்வாளர் புகார் அளித்தவுடன் நான் பேருந்தின் கண்ணாடியை மாட்ட தலைமை அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர்எ திரிகளை

நான் பார்க்கவில்லை. பேருந்தின் கண்ணாடிகளை யார் உடைத்தார்கள் என நான் தெரிந்துகொள்ளவில்லை.

குறுக்குவிசாரணை - இல்லை.

ஒப்பம்/- பூமிராஜன்

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 171/2012
Prosecution Witness PW 3

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கோபாலகிருஷ்ணன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - 19.07.2023.

எதிரிஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது உசிலம்பட்டி கிளை அரசுப் போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.07.2010 அன்று பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 09.30 மணியளவில் உசிலம்பட்டிக்கு பேருந்து எண். TN 58 N 1584, தட எண். 55 U பேருந்தில் நடத்துனராக பணியில்இருந்தபோது, செக்கானூரணி வடிவேல் தியேட்டருக்கு அருகில் உள்ள சந்திலிருந்து கல்லைக் கொண்டுஎறிந்துவிட்டார்கள். அதனால் பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்துவிட்டது. அவ்வாறு கல்லைக் கொண்டு எறிந்தவர்களின் விபரம் எனக்குத் தெரியாது. கல்லை எறிந்தவர்கள் என்ன சத்தம்போட்டுக்கொண்டு கல்லை எறிந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. எங்கள் பேருந்திற்கு முன்னும், பின்னுமாக சுமார் 14 பேருந்துகள் இருந்தது. அவற்றில்ஒரு சில பேருந்துகளின் கண்ணாடிகள் உடைந்திருந்ததை நான் பார்த்தேன். கல் எறிந்தவர்களை யார் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. எங்கள் பேருந்து சேதம் அடைந்தவுடன் பயணச்சீட்டு ஆய்வாளருடன் செக்கானூரணி காவல்நிலையத்திற்கு

சென்றோம். அங்கு பயணச்சீட்டு ஆய்வாளர் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர்என்னை அன்றே விசாரித்தார்.

குறுக்குவிசாரணை **- இல்லை.**

ஒப்பம்/- கோபாலகிருஷ்ணன்

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxxx

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No.171/2012
Prosecution Witness PW 4
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ஜெயச்சந்திரன். | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - 19.07.2023.

எதிரிஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது சோழவந்தான் அரசுப்போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். சம்பவத்தின்போது 14.07.2010 அன்று உசிலம்பட்டி அரசுப்போக்குவரத்துக் கழகத்தில்ஓட்டுநராக பணியாற்றி வந்தபோது, சுமார் 09.30 மணியளவில் மதுரையிலிருந்து உசிலம்பட்டி செல்கையில் செக்கானூரணி வடிவேல் தியேட்டருக்குஅருகில் செல்லும்போது முருகன்ஜி வாழ்க என்று சொல்லிக்கொண்டு ஒரு கும்பல்வந்து, அங்கிருந்த சுமார்15 பேருந்துகளை கற்களைக் கொண்டு பேருந்தின் முன்பக்க மற்றும் பின்பக்க கண்ணாடிகளை உடைத்தனர். எங்கள் பேருந்து 5வது பேருந்தாக நின்றிருந்தது. எங்கள் பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்துவிட்டது. அவ்வாறு கற்களைக் கொண்டு கண்ணாடிகளை உடைத்தவர்களை எனக்கு அடையாளம் தெரியாது. ஆனால் காவல்நிலையத்தில் அவர்களின் பெயர் மற்றும் விபரங்களைச் சொன்னார்கள். ஆஜர்எதிரிகளை எனக்குத் தெரியாது. எங்கள் பேருந்தின் கண்ணாடி உடைந்தவுடன் எங்கள் அதிகாரி பயணச்சீட்டு ஆய்வாளர்

அங்குச்சாமி அவர்களுடன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். இது சம்பந்தமாக காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை- இல்லை.

ஒப்பம்/- ஜெயச்சந்திரன்

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxxxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.